உறுப்பினர்களுக்கும் ஒத்த நீதியை வழங்குவதற்கு உறுதியாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்ற மரபைக் காப்பதிலே செய்தித்தாள்கள் முக்கிய பங்கேற்கின்றன.

" வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை "

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க செய்தியாளர்கள் அந்த அளவுக்கு மிகப் பெரிய பொறுப்பை உணர்ந்து, அவர்கள் தங்கள் ஆசைகளையெல்லாம் ஹேஷ்யங்களாக ஆக்கிவிடாமல், சட்ட மன்ற நிகழ்ச்சிகளைப்பற்றி செய்திகளைக் கூட்டிக்குறைத்து வெளியிடாமல் நடந்தபடியே வெளியிடுவது பாராளுமன்ற மரபைக் காப்பதோடு இந்த மன்றத்தின் பெருமையையும் காப்பாற்றத் துணைபுரிவதாக அமையும் என்று தெரிவித்துக்கொண்டு எல்லோருடைய துணையும் இருப்பதாலே நான் இந்தப் பணியை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி என்னுடைய பணிகளைத் துவங்குகிறேன்.

3. மறைந்த முதலமைச்சர் டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்களின் மனைவிக்கு மானியம் வழங்கல்

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறபோது நான் பேசும்படியான சமயத்திலே இறுதியாக ஒன்றைச் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் அப்பொழுது சொன்னால் பொருத்தமாக இருக்காது என்று நினைத்து அதை இன்றைக்கு சொல்கிறேன். மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் இறந்துவிட்ட சமயத்திலே எல்லாக் கட்சிக்காரர்களும், பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் வந்திருந்து உரிய மரியாதை தெரிவித்ததற்காக இந்தச் சட்டமன்றத்தின் சார்பாக நாம் அவர்களுக்கு மரியாதையைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறோம். எங்கள் பெருந்தலைவர், திரு. காமராஜ், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எல்லாம் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்ட நேரத்திலேயும், பிறகு இறந்துவிட்ட சமயத்திலேயும் வந்து பார்த்து ஆறுதல் சொன்னார்கள். மாண்புமிகு அண்ணாதுரை அவர்களுடைய மனைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கும் பெருந்தலைவர் திரு. காமராஜ், திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எல்லாம் ஆறுதல் சொன்னார்கள். அவர்களுடைய கணவன் அவர்களுக்கு எதுவும் இல்லாமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மறைந்துவிட்ட முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் இருக்கும் வரை நல்ல முறையிலே பணியாற்றினார்கள். கடமையையும் கண்ணியத்தையும் காப்பாற்றினார்கள். அவர்களை இழந்திருக்கிற திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு அரசின் சார்பிலே சீக்கிரமாக மானியத் தொகை கொடுக்கவேண்டுமென்ற கருத்தை

இப்பொழுது நான் அவைமுன் தெரிவித்துக்கொள்கிறேன். இதை சர்க்காரும் மற்றவர்களும் பூரணமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த பரிவோடும், அரசியல் பெருந்தன்மையோடும் கூறிய யோசனைக்கு நான் அண்ணியார் அவர்களுடைய சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சார்பாக அவர்களுக்கு மானியம் அளிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு அண்ணியார் அவர்களுக்கு மானியத்தினை அளிப்பதிலே எந்தவிதமான தயக்கமும் காட்டாது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்ற சம்மதத்தை நாங்கள் அவர்களிடத்திலே பெற்றாக வேண்டியவர்களாக இருக்கிறோம். எற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணா அவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவிகள் செய்யவேண்டுமென்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுதாபம் மிக்க, பரிவுமிக்க இந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன் என்றும், அதற்கான சம்மதத்தை அண்ணா அவர்களுடைய குடும்பத்தினரிடமிருந்து பெற்றபிறகு, கலந்து ஆலோசித்து, முடிவை இந்த மன்றத்திலே அறிவிப்பேன் என்று கூறி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நவின்று அமைகிறேன்.

4. திரு. க. கோமதிசங்கர தீட்சிதருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவைக்கு இன்னொரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறவிரும்புகிறேன். இந்த மன்றத்திலே இப்பொழுது உறுப்பினராக இருப்பவரும், நம்மிடையே இருக்கின்ற அத்தனைபேரிலும் முதியவராக இருப்பவரும், 81 ஆண்டுகளை நிறைவெய்தியவராக இருப்பவரும் ஆகிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலும் இந்தச் சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருந்து நல்ல முறையிலே பணியாற்றி வந்திருக்கிறார்கள். சென்ற முறை நாங்கள் எதிர்த்தரப்பில் இருந்தபோது, நாங்கள் பேசும்பொழுது பேச்சின் நயத்தைக் கண்டுவிட்டு, எங்களுடைய பேச்சு முடிந்தவுடனே எங்களைக் கட்டி அணைத்துப் பாராட்டுகின்ற பேருள்ளம் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்கு 81 ஆண்டுகள் நிறைந்துவிட்டாலும், சட்டப்பேரவைப் பணிகளிலே விறுவிறுப்போடும் பெருந்தன்மையோடும் நடந்துகொள்கிறார்கள். அவர்கள் கேள்விகள், கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அதிகமாகக் கொடுத்துக்கொண்டு முழுமூச்சுடன் தம் பணியிலே